விலை ரூபா 5/-

# ஐக்கிய தீபம்

Aikiyatheepam

தீபம் - 51 பங்குனி 1999 பக்கங்கள் 12 ஒளி 35

# பெண்கள் தம் உரிமைகளை மட்டும் பேசாமல் தமது கடமைகளைச் சரிவர செய்ய வேண்டும்!

## அனைத்துலக மகளிர் தினவிழாவில் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி

''பல்வேறுபட்ட அடக்குமுறைகளினாலும், ஒடுக்குமுறைகளினாலும், அடிமைப்படுத்தி, பல இன்னல்களுக்கு இலக்காகி அல்லலுற்ற பெண்ணினத்தின் விடுதலைக்கு வித்திட்ட பாரதியை நாம் மறந்து விடலாகாது பெண்கள் தமது உரிமைகளை மட்டும் தனியே பேசிக்கொண்டிராமல் தங்கள் கடமைகளை ஒழுங்காக சரிவரச் செய்து வருவார்களானால் அவர்கள் தங்களின் தனித்துவத்தை இழக்க முடியாது''

யாழ் மாவட்ட கூட்டுறவுச்சபையின் மாவட்ட மகளிர் குழு நடாத்திய அனைத்துலக . பெண்கள் தினவிழாவில் முதன்மை விருந்தினராகக்கலந்து கொண்டு கூட்டுறவுக்கொடியை ஏற்றி வைத்து உரையாற்றிய ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான தலைவி சிவத்தமிழ்ச்செல்வி, . கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் மேற்கண்டவாறு கூறினார்.

மாவட்ட மகளிர்குழுத் தலைவி திருமதி ரதிசோதிலிங்கம் தலைமையில் வேம்படி மகளிர்கல்லூரி மண்டபத்தில் இவ்விழா நடைபெற்றது.

இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினர்களாக வருகை தந்திருந்த யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபைத் தலைவர் திரு பெ. கனகசபாபதி, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் [பனை, தென்னை வளம்] திரு. சே. பரநிருபசிங்கம், வேம்படி மகளிர்கல்லூரி அதிபர் திருமதி க பொன்னம்பலம் ஆகியோர் மங்களவிளக்கேற்ற பயிற்சி மாணவிகள் கூட்டுறவுக்கீதம் இசைத்தார்கள்.

சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி தொடர்ந்து பேசுகையில்.

குறிப்பிட்ட தினத்தில் பல இடங்களிலும் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்பட்டது. இத்தினத்தில் மட்டும் மகளிர் எழுச்சிகள் கொண்டாடினால் மட்டும் போதாதது. பெண்களை பெண்கள் மட்டுமே உயர்த்திக் கொள்ள வேண்டுமேயொழிய மற்றவர்கள் உயர்த்தவேண்டுமென்ற எண்ணத்துடன் செயற்படக்கூடாது.

பெண்கள் ஆண்களுடன் சரிநிகர் சமாக இருக்கவேண்டும். இன்றுமட்டுமல்ல இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பெண்கள் மதிக்கப்பட்டு வந்தார்கள். ஆனால் சமணர்களும், பௌத்தர்களும் பெண்களை அடிமைப்படுத்தவிளைந்தார்கள்

பெண்கள் எந்த விடயத்திலும் தன்நம்பிக்கையுடன் செயற்படவேண்டும் என்று கூறினார்.

யாழ். மாவட்ட மகளிர் விவகார உத்தியோகத்தர் திருமதி வே. செல்வரத்தினம் வரவேற்புரையை நிகழ்த்தினார்.

கூட்டுறவுச்சபைத்தலைவர் திரு. பெ. கனகசபாபதி, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்

(8ம் பக்கம் பார்க்க)

## வீரசிங்கம் மண்டபத்தை கட்டி எழுப்ப வாரி வழங்குவீர்!

- மாவட்டக் கூட்டுறவுச் சபை கோரிக்கை -

கடந்தகாலயுத்த அனர்த்தங்களினால் பேரழிவுக்குட்பட்ட நிலையில் காட்சி தரும் வீரசிங்கம் மண்டபத்தினைபுனர் நிர்மாணம் செய்வதற்கு யாழ் மாவட்ட கூட்டுறவு சபை நிதி உதவி கோரி கூட்டுறவாளர்களிடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

அவ்வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

(8ம் பக்கம் பார்க்க)

உள்ளே...

☆ பணமுகாமைத்துவம்
☆ பொருளாதார அபிவிருத்தியும் கூட்டுறவு அமைப்புக்களின் பங்குபற்றலும்
☆ முகமற்ற மனிதர்கள் - சிறுகதை
☆ இளம்பிள்ளை வாதம்
☆ அமிர்தம்குடித்த மரம்
☆ மரமுந்திரிகை பயிர்ச்செய்கை

★ கூட்டுறவே நாட்டுயர்வு ★



## அமரர் சி இராசேந்திரம்

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவற்றுக்கு உதாரணமாக ஏறத்தாள அரை நூற்றாண்டு காலம் கூட்டுறவில் பணியாற்றிய திரு. சின்னப்பு இராசேந்திரம் தனது அறுபத்தைந்தாவது அகவையில் இறைபதம் அடைந்தார்.

அமரர் சி இராசேந்திரம் வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையினரால் நாடத்தப்பட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்ற பின் அக் கல்லூரியிலேயே பணியாற்றும் வாய்ப்பினைப் பெற்றிருந்தார்.

இவரது கூட்டுறவுப் பணி, சிறிலங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் யாழ். மாவட்டக் கிளையிலும் வவுனியா மாவட்டக்கிளையிலும், யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையிலும் தொடர்ந்து வந்தது.

அமரர் சி. இராசேந்திரம் தனது சேவையின் சிறப்பினால் கூட்டுறவாளர்களினாலும், கூட்டுறவுப்பணியாளர்களினாலும் பெரிதும் மதிக்கப்பட்டு கூட்டுறவுத் துறைசார்ந்த அனைவரினதும் அன்புக்குப் பாத்திரமாகத் திகழ்ந்தார்.

கூட்டுறவுப் பணியில் இருந்து ஓய்வு பெற்றபின் விவசாயத்துறை, ஆன் மீகத்துறை, சமூகசேவை ஆகியவற்றில் ஈடுபட்டு இருபாலை தெற்கு விவசாய சம்மேளனத்தின் பொருளாளராகவும், ஸ்ரீ ராஜஇராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் பரிபாலனசபை பொருளாளராகவும், நிர்வாகசபை

( 8 ம் பக்கம் பார்க்க )

## கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர உயர் பிரிவு பரீட்சை முடிவுகள்

யாழ். மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் 1998-ம் ஆண்டு கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர உயர்தரப்பயிற்சி நெறியில்பயிற்சி பெற்று கூட்டுறவுக் கல்லூரி வடகிழக்கினால் (திருகோணமலை) நடாத்தப்பட்ட இறுதிப் பரீட்சையில் 24 பேர் சித்தி அடைந்துள்ளனர். 11 பேர் நூனசித்தி அடைந்துள்ளனர்.

சித்தி அடைந்தவர்களில் மூவர் இரண்டாம் பிரிவிலும், 21 பேர் மூன்றாம் பிரிவிலும் சித்திபெற்றுள்ளனர்:

2-ம் பிரிவில் சித்திபெற்றோர் கி. கிருஷ்ணவேல், அ. ந. திரேஸ் ஜெனிற்றா, சி நேசராசா.

3-ம் பிரிவில் சித்திபெற்றோர் சு. உமாகேஜினி, ஜெ. கனகாம்பிகை ச. சசிக்குமார், க. சத்தியரூபன், இ. சிவகுமார், ந. சிவகுமாரன், க. சிவலிங்கம், இ. சுவர்ணா, ஐ. செந்தில்குமார், பொ. செல்வராசா, ந ஞானசேகரம், து தயாளினி, செ. தர்சரூபன் இ. தனுஷா, க நவநீதன் இ முகுந்தன், இ. ஜெயாழினி, தெ. வதனா, சி. விஜிதா, க. வேல்முருகு, இ. மாலதி, ச. தவநேசன்.

## வெளியீடும் கௌரவிப்பும்

கூட்டுறவுக் கீதம் இசையமைத்து வழங்கிய யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் முதுமெய்யியல்மானி நயினை நா. வி. மு நவரத்தினம் அவர்கள், யாழ். மாவட்டக் கூட்டுறவுச்சபைத் தலைவர் திரு பெ கனகசபாபதி அவர்களினால் பொன்னாடை போர்த்தும், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (பனை தென்னை வளம்) திரு. கே. பரநிருபசிங்கம் அவர்களினால் மலர்மாலை அணிவித்தும் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபையின் மாவட்ட மகளிர்குழுநடாத்திய அனைத்துலக பெண்கள் தினம் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில், மகளிர் குழுத்தலைவி திருமதி ரதி சோதிலிங்கம் தலைமையில் நடைபெற்ற போது கூட்டுறவுக்கீத ஒலிப்பதிவு நாடா வெளியீடும், கௌரவிப்பும் இடம் பெற்றது

## ஐக்கியதீபம் காட்டும் ஆக்கமாம் ஒளி!

ஐக்கியம் ஆக நின்றால்
அதுபெரும் பலமாம்! நாமும்
ஐக்கியம் ஆக வாழும்
அற்புதப் பாதை சென்றே
ஐக்கியத் துறைகள் தன்னில்
உறுதியாய் உழைப்போம்!
உயர்வாம்
ஐக்கிய தீபம் என்றும்
ஆக்கமாம் ஒளியே காட்டும்!

நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்

## தளபாட உபகரணங்கள் அன்பளிப்பு

சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் நடாத்தப்படும் ஏழாலை மயிலங்காடு சிறி முருகன் சிறுவர் பாடசாலைக்கு ஒரு தொகை பணம் உட்பட ஒரு தொகுதி தளபாடங்களையும், கற்பித்தல் உபகரணங்களையும் மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குனர் வண. பிதா கி. ஜெயக்குமார் அடிகளார்வழங்கினார்.

சங்கப் பொது முகாமையாளர் திரு. ஜே. பி. குணரத்தினம் தலைமையில் இடம்பெற்ற இவ் வைபவத்தில் பங்குத் தந்தை வண. பிதா ஞானப்பிரகாசம் அடிகள், சிறுவர் பாடசாலை ஆசிரியர், இணைப்பாளர் செல்வி பத்மாவதி, மாணவர்களின் பெற்றோர்கள், நிர்வாகிகள், மற்றும் நலன் விரும்பிகளும் கலந்து கொண்டார்கள் சங்கத்தலைவர் திரு. க. மெய்யழகன் நன்றி கூறினார்

### வரவேற்கிறோம்

கூட்டுறவாளர்கள், எழுத்தாளர்களிடமிருந்து கதை, கட்டுரை கவிதை, பொது அறிவு விடயங்களை எதிர் பார்க்கிறோம். எழுதும் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் சுருக்கமாக எழுதி

ஆசிரியர் ஐக்கியதீபம்
யாழ்மாவட்டக்கூட்டுறவுச் சபை
இல 14 மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்

என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

# பண முகாமைத்துவம் MONEY MANAGEMENT

முகாமையியல்

**க. தேவராஜா**
தலைவர் வணிகத்துறை
யாழ். பல்கலைக்கழகம்

தொழில் நிறுவனங்களில் உள்ள சொத்துக்களில் நாளாந்தம் பயன்படுவதும் அதிக திரவத்தன்மை கொண்டசொத்தாகக் காணப்படுவதும் பணமேயாகும். பொதுவாக நிறுவனங்களில் பணம் என்பது கையில் உள்ள காசையும் வங்கியில் உள்ள காசையும் குறிப்பதாக அமையும், நிறுவனங்களின் நாளாந்த கொடுக்கல் வாங்கல்களுக்கு உபயோகிக்கப்படும் இப்பணத்தை திறம்பட முகாமை செய்வதென்பது முக்கியம் பெறுகின்றது. பண முகாமைத்துவமென்பது நிதிப்பாய்ச்சலைத் திட்டமிட்டுக் கொள்வதுடன் மிகையாக உள்ள பணத்தை இலாபகரமான துறைகளில் ஈடுபடுத்தலையும், சரியாகக் கட்டுப்படுத்தலையும் குறிக்கும்

ஒரு நிறுவனம் தனது ஆரம்ப காலத்தில் பணமுகாமைக்கு முக்கியத்துவம் கொடுத்தல் வேண்டும் நடைமுறையிலே பல நிறுவனங்களில் இலாபகரமாக இயங்கும் காலத்தில் பணமுகாமைத்துவத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை, ஆனால் நிறுவனங்கள் நட்டமடையும் போது அல்லது திறனற்று இயங்குப்போது மட்டுமே பண முகாமை மீது பலரது கவனம் திரும்பும். இது நிறுவனத்தின் வளர்ச்சிக்கு உகந்ததல்ல என்பதனால் நிறுவனங்களின் தொடக்க காலத்திலிருந்தே பணமுகாமைத்துவத்தின் மீது கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

## பணத் தேவையைத் திட்டமிடல்

பணமுகாமைத்துவத்தில் பணத்துக்கான தேவையைத் திட்டமிடல் அவசியமாகின்றது இது நீண்டகால நிதித் தேவைகளையும் குறுங்கால நிதித் தேவைகளையும் உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும். குறுங்கால நிதித் தேவைகளை மதிப்பீடுகையில் ஒரு வருட காலத்திற்குள் பெறப்போகும் காசுகளையும் கொடுக்க வேண்டிவரும் காசுகளையும் சரியாக மதிப்பிடல் வேண்டும். இந்த குறுங்கால நிதித்திட்டமிடலுக்கும் எதிர்வு கூறலுக்கு நிறுவனங்கள் காசுப் பாதீட்டினைப்பயன் படுத்துவது வழக்கம். இதன் மூலம்மாதாந்தம் ஏற்படக் கூடிய காசு மிகையினை அல்லது காசுப்பற்றாக்குறையினை அவர்கள் அறிந்து கொள்ள முடியும்.

நீண்டகால நிதி நிலைமைகளை முகாமை செய்யும் போது ஒரு வருடத்திற்கு மேற்பட்ட நிதி நிலைமையை மதிப்பீடு செய்தல் வேண்டும். இதில் நீண்ட கால வியாபார நடவடிக்கைகள் மூலம் எதிர் பார்க்கப்படு பண வருமானம் முதலில் அறியப்படல் வேண்டும் அதேபோல் வெளி மூலகங்களால் பெறப்படுதற்கு திட்டமிடப்பட்ட பணமும் நடைமுறைச் சொத்துக்கள் மீது செலுத்தப்பட வேண்டிய பணமும் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும். இவற்றின் மூலமாக எதிர்காலத்துக்குரிய பணப் பெறுவனவுகளையும் பணக்கொடுப்பனவுகளையும் அறிந்து கொள்வது பணமுகாமைத் துவத்திற்கு பொருத்தமுடையதாகும்.

## நிதிப்பாய்ச்சல் கட்டுப்பாடு

நிதிப்பாய்ச்சல் பொதுவாகவே நிறுவனங்களில் இடம் பெற்று வரும் காசு உட்பாய்ச்சலையும் காசின் வெளிப்பாய்ச்சலையும் உள்ளடக்குவதாகும் சரியான நிதிப்பாச்சல் கட்டுப்பாடானது திறமையான பண முகாமைத்துவத்திற்கு வகை செய்யும் இதன் அடிப்படையிலேயே கடன் பட்டோரிடமிருந்து பெறப்படவேண்டிய காசைப் பெறுவதற்குரிய சகல நடவடிக்கைகளையும் மேற் கொள்வதுடன் தேவையற்றவகையில் இருப்பில் காசை முடக்கும் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதுடன், கடன் கொடுத்தோருக்கான கொடுப்பனவுகளை சரியான நேரத்தில் மேற்கொள்ளவும் அவசியமற்ற செலவுகளைத் தவிர்த்துக் கொள்ளவும் வேண்டும். இத்தகைய நடவடிக்கைகளால் காசின் உட்பாய்ச்சல் அளவுடன் காசின் வெளிப்பாய்ச்சலின் அளவைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியும்.

## மிகையான பணத்தை இலாபகரமாக முதலீடு செய்தல்.

நிறுவனங்கள் இயலுமானவரை திறமையாக காசைப் பெறுவதும் வியாபாரத்திற்கு மேலதிகமாக உள்ள பணத்தை இலாபகரமாக முதலீடு செய்வது பண முகாமையில் முக்கியம் பெறு திரட்டப்பட்ட பணத்தை இருப்பில் வைப்பதோ வங்கி நடைமுறைக்கணக்கில்வைப்புச்செய்வதோ எந்தவிதமான பண வருவாயையும் தருவதில்லை, எனவே அதனைப் பண வருமானம்தரக்கூடிய பொருத்தமான துறைகளில் முதலீடு செய்தல் வேண்டும். இவ்வாறு மிகையாகக் கிடைத்த பணத்தைக் கொண்டு புதிய முதலீடுகளை மேற்கொள்ளும்போது நடைமுறை மூலதனத்தில் பாதிப்பு ஏற்படாது இருப்பதனை பண முகாமை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

## பணமுகாமைத்துவம் பாதிப்படைவதற்கான காரணங்கள்.

பண முகாமைத்துவத்தை சிறப்பாக மேற்கொள்ளும் நிறுவனங்களே எவ்வகையான நிதிச் சிக்கல்களையும் தவிர்த்துக் கொள்ள முடியும். தற்காலத்தில் பாரிய நிறுவனங்கள் அனுபவமுள்ள முகாமையாளர்களையும், பல்வேறு தந்திரோபாயங்களையும் பயன் படுத்தி பண முகாமைத்துவத்தை சிறப்பாக நிறைவேற்றுகின்றன, ஆனால் சிறிய நிறுவனங்கள் சரியான பண முகாமைத்துவத் துவத்தினைக் கொண்டிருப்பதில்லை: இதற்கு பின்வருவன காரணங்களாகும்

1 பலவீனமான உள்ளகக் கட்டுப்பாடுகள் நிறுவனங்களில் காணப்படுதல் பணமுகாமையை பாதிப்புக்கு உள்ளாக்கின்றது முகாமையாளர் மட்டத்திலும் ஊழியர் மட்டத்திலும் இடம் பெற்றுவரும் மோசடிகள் பணமுகாமை பாதிப்புறக் காரணமாகின்றது.

2 சிறப்பான நிதித் திட்டமிடல் இன்மையால் பண முகாமை பாதிக்கப்படுகிறது. எதிர்வு கூறல்சரிவர நிகழாத விடத்து எதிர்கால பணப் பெறுவனவுகளையும் பணக்கொடுப்பனவுகளையும் சரிவரத் திட்டமிட முடியாது போகின்றது.

3 தேவையற்ற வழிகளில் பணத்தை செலவு செய்தல் பண முகாமையைப் பாதிப்பதாக உள்ளது. நிறுவனங்கள் தொழிற்படு முதல் அதிகமாக உள்ள தெனக் கருதி நிலையான சொத்தொன்றைக் கொள்வனவு செய்ய முற்படின் அது தொழிற்படு முதலை பற்றாக் குறையாக்கி பணத்தட்டுப்பாட்டை ஏற்படுத்திவிடும்.

( 10ம் பக்கம் பார்க்க )

**பொருளியல்**

# பொருளாதார அபிவிருத்தியும்

## கூட்டுறவு அமைப்புக்களின் பங்குபற்றலும்

அ. கேதீஸ்வரன் (B. A. Hons)
விரிவுரையாளர் மாவட்டக் கூட்டுறவு
பயிற்சிக் கல்லூரி
கிளிநொச்சி

மாறிவருகின்ற உலகப்பொருளாதாரத்தின் போக்குக்கு ஏற்ப நாடு ஒன்றினதுஅபிவிருத்தி பற்றிய செயல்பாங்கு மாற்றங்களுக்குட்பட்டுவிடும் இதில் ஒவ்வொரு நாட்டினது வரலாறும் அவை தரிசித்த வேறுபட்ட அரசியல் பொருளாதார முறைமைகளும் சிறப்புத்தன்மை சார்ந்தவளக்கிடைப்பனவும் இந் நாடுகளின் வளர்ச்சி வேகத்தையும் வேறுபாட்டையும் நிர்ணயிப்பனவாகவுள்ளன. இதில் வெளிவாரியான நிர்ணய காரணிகளிலும் பார்க்க உள்வாரியான அமைப்பு மாற்றம் அபிவிருத்தி செய்முறையின் பிரதான இயங்கு சக்தியாக கருதப்படுகின்றது. அதிலும் குறிப்பாக அமைப்பு மாற்றத் தூண்டல் காரணி என்ற நிலையான நிறுவனங்களின் பங்காற்றல் என்பது பெற்று நிற்கிறது இந்த கருத்துத் தளத்தினை அடிப்படையாகக் கொண்டு பொருளாதார அபிவிருத்தி செயற்பாடு பற்றியும், அதில் நிறுவனங்களினது பங்காற்றல் பற்றியும் கலந்துரையாடுவது பொருத்தமாகும். எனினும் துறைசார் நிறுவன வகைகள் பலவற்றிலிருந்தும் எமது தேவை நிலைக்கேற்ப கூட்டுறவு அமைப்புக்களின் பங்காற்றலை சிறப்புக் கவனத்துடன் ஆய்வு செய்து கொள்வோம்.

அபிவிருத்தி - பொருளியலில் அபிவிருத்தி, வளர்ச்சி என்ற கலைச்சொற்கள் பெறுமதியுடைய நிறைவான பொருளுடைய பதங்களாகவே உள்ளன. இவை வெவ்வேறு அர்த்தமுடைய செயல்பாங்கினை காலத்துக்குக் காலம் குறிப்பதாக வரைவிலக்கணப்படுத்தப்பட்டு வந்துள்ளன. ஐக்கிய நாடுகள் நிறுவனம், அடம் சிமித், டட்லிசீயஸ் போன்ற அறிஞர்கள் சில வரைவிலக்கணங்களை மொழிந்தனராயினும் இன்றுவரை ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒருநிறைவான கருத்தாக அபிவிருத்திப்பொருளியலாளர்கள்''ஒரு நாட்டின் தனிநபர் வருமானம்அதிகரித்துச் செல்வதுடன் அந்நாட்டின்சமூக,கலாச்சார பண்பாட்டு அரசியல், நிறுவன, சிந்தனை, என்பனவற்றில் ஏற்படும் மெய்யான மாறுதல்களையே அபிவிருத்தி எனும் பதம் குறிக்கிறது. இது ஒரு இயங்கு நிலை செய்முறையாகக் கருதப்படுகிறது. வளர்ச்சி என்பது மொத்த தேசிய உற்பத்தியில் ஏற்படும் வளர்ச்சியை அல்லது தலா வருமானத்தில் ஏற்படும் மெய் ரீதியான மாற்றத்தை மட்டுமே குறித்து நிற்கிறது.

இலங்கையின் அபிவிருத்தி குறித்து இவ்விடத்தில் நாம் வரைவிலக்கண அனுசரிப்புடன் நோக்கும் போது இலங்கையின் சமூக கலாசார பண்பாட்டு அரசியல் தளங்களில் குடியேற்ற வாதத்துக்குட்பட்ட நீண்ட பெரும் காலமும், அக்காலத்தில் எமது அமைப்பில் நிகழ்ந்த மாற்ற முடியாத வடுக்களும் தற்போதய நவகாலனித்துவகால தங்கியிருப்பு தொடர்ச்சியும் அபிவிருத்தி செய்முறையின் பால் தொடர்ந்து வரும் சவாலாகவே இருந்து வருகின்றது. தங்கியிருப்பு தொடர்பான மைய எல்லை நாட்டு கோட்பாடு இலங்கையைப் பொறுத்தும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு செயற்பாடாகவே இருந்து வருகின்றது. 3 - வது உலக நாடுகள் அனைத்திலும் அபிவிருத்தி செய்முறை என்பது அதனது அமைப்பு சார்ந்த பிரச்சினைகளை மையமாக கொண்டே ஆராயப்பட வேண்டியுள்ளது

3 - ம் உலக நாடுகளின் வரலாறு என்பது அடிமைத்தனத்துக்குட்பட்ட காலனியாதிக்கத்தின் வரலாறாகவே பெருமளவுக்கு இனம்காணப்படுகிறது: இலங்கையிலும் கூட காலனியாதிக்கமென்பது 3 நூற்றாண்டுகளின் வரலாறாக, வெளிப்பேறாக காணப்படுகிறது ஒரு சமூகம் அல்லது ஒரு நாடு அல்லது ஒரு தேசம் தன்னைவிடக் கூடுதலாக வளர்ச்சியடைந்த இன்னொரு சமூகம் அல்லது தேசத்தினால் அரசியல் ரீதியாகவோ, அல்லது பொருளாதார ரீதியிலோ, அல்லது கலாசார ரீதியிலோ அல்லது இம் மூன்று வகையிலுமோ ஆதிக்கம் செலுத்தப்பட்டு அனுபவிக்கும் அடிமைத்தனமான அல்லது தரக் குறைவான நிலையே காலனித்துவம் அல்லது குடியேற்ற நாட்டு வாதம் என்பது குறிக்கிறது. இந்தத் தன்மை காரணமாக 3 - ம் உலக நாடுகள் முழுவதிலும் முதலாளித்துவம் பரவியது என்பதற்குப்பதிலாக தங்கியிருத்தல் முதலாளித்துவம் என்பதுவே பொருளாதார முறைமையாக அறிமுகப்படுத்தப்பட்டது. இதனால் இந் நாடுகளின் முதலீட்டாளர் வர்க்கம் என்பதுவும் தங்கியிருப்பு தன்மைக்குட்பட்ட செயற்திறனையே கொண்டிருந்தது. சமூக அமைப்பிலும் இந்த வளர்ச்சி ஒரு மட்டுப்படுத்தப்பட்ட உயர் குழாமை மட்டுமே தோற்றுவித்திருந்தது. பெரும் எண்ணிக்கையான சுதேச மக்களை வறியவர்களாக்கி வறியவர் மயவாக்கம் என்ற பெரும் சிக்கலுக்குள் தள்ளிவிட்டது. பின்னராக சுதந்திர அரசுக்கான சுதேசிகளினது கையேற்பு நிகழ்ந்த போது அபிவிருத்திக்கான சுதேசியத் 'தன்மை நீண்ட பெரும் காலத்துக்கு காலனித்துவத்தின் படிமமாக தொடர்ந்து வந்திருக்கிறது';

இந் நிலையில் வறியவர் மயவாக்கத்துக்குட்பட்ட பெருமளவானோரை மீண்டும் தற்சார்புடைய சுதேசிகளாக மாற்றுவதற்கு தேசிய ரீதியில் பலமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போது அவற்றை மக்கள் மத்தியில் வழிப்படுத்தும் நிறுவனங்களின் பங்கு பெரும் உதவியளித்தது. இதில் அரசசார் நிறுவனங்களில் குடியேற்ற வாதகால நிர்வாகமும் தாராண்மை வாத பண்பும் தொடர்ந்தேவந்தன மக்கள் மத்தியில் தற்சார்புடன் செயற்படக் கூடிய மக்கள் பங்கு பற்றுதலை தன்னியல்பாக தோற்றுவிக்கக் கூடிய அமைப்புக்களின் தேவை அவசியமாக்கப்பட்டது. இந்த வெற்றிடத்தை நிரப்பும் வரலாற்றுப் பணியிலும் சுய ஆர்வக் குழுக்களாக மக்களை ஒழுங்குபடுத்தி கிராமிய மட்டத்தில் தலைமைத்துவத்தை தொடக்கி வைப்பதிலும் கூட்டுறவு அமைப்பு பங்களிப்புச் செய்திருக்கிறது. இந்த தொடர் நிகழ்ச்சியின் செயல் நிறைவேற்றம் பல்வேறு காலகட்டங்களிலும் பல்வேறு முறைசார் நிறுவன வடிவங்களுக்கூடாக எய்தப் பெற்றிருக்கிறது.

சுதந்திரத்துக்கு முன்னராகவே சிறு முதலீட்டாளர் வர்க்கம் ஒன்றை எழுச்சி பெறச் செய்து ஐக்கிய நாணய சங்கங்கள் கடன் வழங்கும் பணச் சந்தை பங்களிப்பாளர் என்ற பொருளாதார செயல்பாட்டை தொடங்கியிருந்தன. இது சேமிப்பு பழக்கத்தை கிராமிய மட்டங்களில் தொடக்கி வைப்பதிலும் சிறியதர

(9ம் பக்கம் பார்க்க )

# இளம்பிள்ளை வாதம்

பாடிப் பறந்துதிரியும் பறவைக ளின் சிறகுகளை முறித்துப் போடு வதுபோல மழலை மொழி பேசி, ஓடியாடித் திரியும் குழந்தைகளின் கை, கால்களை செயல் இழக்கச் செய்து, அவர்களை முடமாக்கிவிடும் மிகக்கொடியநோய் ''இளம்பிள்ளை வாதம்'' என்னும் நோயாகும்

இக் கொடிய தொற்று நோயி லிருந்து உங்கள் குழந்தைகளைக் காப்பாற்ற இக் கட்டுரையைப் படியுங்கள்.

- ஆசிரியர்

''போலியோமைலிட்டிஸ்'' (*Poliomyelitis*) என்று மருத்துவர்களால் அழைக்கப்படும் இந்த நோய் ஒரு அதி தீவிர தொற்று நோய் வகையைச் சேர்ந்தது. இந்த நோய் எல்லா வய தினரையும் தாக்கக் கூடியது என்றா லும், ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளே இதனால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். எனவேதான் இதற்கு '' இளம்பிள்ளை வாதம் '' என்று பெயர் சூட்டியுள்ளனர்.

### வைரஸ் கிருமிகள்

இந்த நோய் ''போலியோ வைரஸ்'' (*Poliovirus*) என்னும் நுண் கிருமிகளால் உண்டாகிறது இந்த வைரஸில் I, II, III என்று மூன்று வகைகள் உள்ளன. இவற் றில் முதல் வகை வைரஸ்தான் மிக வும் ஆபத்தானது.

இந்த நோய் கண்ட குழந்தையின் தொண்டையிலும், குடலிலும் இவ் வைரஸ் கிருமிகள் வாழ்க்கை நடத்து கின்றன தொண்டைச்சளியிலும்மலக் களிலும் இவை உடம்பை விட்டு வெளியேறுகின்றன.

அசுத்தமான வசிப்பிடங்களி லும், சுற்றுப்புற சுகாதாரம் அறவே இல்லாத இடங்களிலும் இந்தக் கிருமி கள் மண்ணோடு மண்ணாகக் கலந்து பல வாரங்களுக்கு உயிரோடு இருக் கின்றன. குளிர்காலங்களில் காணப் படும் குளிர்ந்த சீதோஷ்ண நிலை யில் இவை பல மாதங்கள் வரை வாழும் வல்லமை படைத்தவை அதே சமயம் சூரியஒளி, வெப்பம், குளோரின் மற்றும் பார்மலின் என் னும் கிருமி நாசினிகள் போன்றவற் றால் இந்தக் கிருமிகளை எளிதில் அழித்துவிடலாம்.

### நோய் பரவும் விதம்

இளம்பிள்ளை வாத நோயால் பாதிக்கப்பட்டிருக்கும் ஒரு குழந்தை யிடமிருந்து தான் மற்றொரு குழந் தைக்கு நோய் பரவுகிறது. நோய் வாய்ப்பட்ட குழந்தை இருமும் போதும், தும்மும போதும் தொண் டையிலிருந்து வெளிவரும்சளிமூலமும் அந்தக் குழந்தையின் மலக்களிலும் வைரஸ் கிருமிகள் வெளியேறி நேர டியாகவோ, அல்லது ஈக்கள் மூலமோ உணவிலும், குடிநீரிலும், கலந்து குழந்தையின் உடம்பில் நுழைந்து கொள்கின்றன. அங்கு சென்றதும் தொண்டையிலும் குடலிலும் உள்ள நிணநீர்த் திசுக்களில் (*Lymphatic tissues*) இனப்பெருக்கமடைந்து நிண நீர்ப்பாதை வழியாக இரத்தத்தில் கலக்கிறது. பின்பு அங்கிருந்து மூளைக் குச் சென்று மத்திய நரம்பு மண்ட லத்தைத் தாக்குகின்றது.

இதில் ஒரு விசேடம் என்னவென் றால் போலியோ வைரசுக்கள் பெரும் பாலும்முதுகுத்தண்டுவடத்தில் உள்ள (*Spinal Cord*)இயக்கநரம்பணுக்களை *Anterior Horn cells*) மட்டுமே விரும் பித்தாக்குகின்றன. அதனால்தான் இந்தநோயினால் கால்கள் செயல் இழக்கின்றன சிலசமயங்களில் மூளை நரம்பணுக்களையும் அவை பாதிப்ப துண்டு அப்போது கைகளும் கால் களும் ஒரே நேரத்தில் செயல் இழக் கும்.

அவை மார்புத்தசைகளையும் பாதித் திருந்தால் குழந்தையின் சுவாசம் பாதிக்கும். மூச்சுவிடத் திணறும். இத் தச் சமயத்தில் மருத்துவச் சிகிச்சை உடனே கிடைத்துவிட்டால் உயிர் பிழைக்கும். கிடைக்காவிட்டால் மரணம் வெல்லும்.

### என்ன செய்வது?

பாதிக்கப்பட்ட குழந்தையை உட னடியாகத் தனிமைப்படுத்த வேண் டும். இதனால் மற்றக் குழந்தை களுக்கு நோய் தொற்று ஏற்படு வதை எளிதில் தவிர்க்கலாம். மேலும் இளம்பிள்ளை வாத நோய்க்கு வீட்டு வைத்தியம், நாட்டுவைத்தியம் என்று பார்த்துக் கொண்டு காலம் தாழ்த்தா மல் ஆரம்பத்திலேயே குழந்தையை மருத்துவமனையில் சேர்த்துவிட வேண்டும். அங்கு பல வாரங்கள் படுக் கையிலேயே இருக்க வேண்டும் இத னால் உடம்பில் மேற்கொண்டு ஏற் படக்கூடிய பாதிப்புகளைக் குறைக்க லாம்.

### தடுப்பு மருந்து

1954 - ஆம் ஆண்டில் ஆல்பர்ட் சாபின் (*Albert sabin*) என்ற அமெ ரிக்க விஞ்ஞானிகண்டுபிடித்த ''இளம் பிள்ளை வாத வாய் வழி தடுப்புச் சொட்டு மருந்து'' (*Oral polio Drops*) தான் இன்றைக்கும் இளம் பிள்ளை வாதத்தைத் தடுக்கும் மருந் தாகப் பயன்படுகிறது

இந்த மருந்தை குழந்தை பிறந்து ஆறு வாரங்கள் முடிந்ததும் முதல் முறையாக இரண்டு சொட்டு (வாய் வழி) கொடுக்கவேண்டும் பிறகு 10 வாரம் முடிந்ததும் இரண்டாம் முறையும், 14 வாரம் முடிந்ததும் மூன்றாம் முறையும் 18 வாரம் முடிந் ததும் நான்காம் முறையும், இதே மருந்தை அதே அளவுக்கு கொடுக்க வேண்டும். பின்னர் குழந்தைக்கு 1½, 3, 5 வயதுகள் முடியும் போது ஒவ் வொரு முறையும் இந்த தடுப்பு மருந் தைக் கொடுக்க வேண்டும் பொது வாக இந்தத் தடுப்பு மருந்தைக் கொடுக்கின்றபோது 'முத்தடுப்பூசி' (*DPT* அல்லது *Triple antigen*) யை யும் போடுவது வழக்கம்.

முறையாகத் தடுப்பு மருந்து கொடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்புசக்தி அதிகமாகிவிடுவ தால் இளம்பிள்ளை வாதம் இவர் களை அண்டுவதற்கு அஞ்சும்.

# சுகவளம்

### நோயின் அறிகுறிகள்

வைரஸ் கிருமிகள் உடம்புக்குள் நுழைந்த 7 - 14 நாட்களுக்குள் நோயின் அறிகுறிகள் தெரிய ஆரம் பிக்கும். தொடக்கத்தில் மிதமான காய்ச்சலும் சாதாரண தடுமனும் தான் தெரியும். அப்போது தொண்டை வலியும், தொண்டைக் கரகரப்பும் தொந்தரவு செய்யும் நோய்எதிர்ப்புசக்தி(*Immunity*) உள்ள குழந்தைகளுக்கு இந்த அளவில் தொல்லைகள் மறைந்துவிடும். எதிர்ப்புசக்தி இல்லாத குழந்தை களுக்கு நோயின் தீவிரம் அதிக மாகும்.

காய்ச்சல் ஆரம்பித்த மூன்றாம் நாளில் தலைவலி, கால்வலி, கழுத்து வலி, வாந்தி என்பன சேர்ந்து கொள் ளும். 5 ம் நாளில் கழுத்தைத்திருப்ப முடியாத அளவுக்கு வலி அதிகரிக் கும். அதுவரை நின்று, நடந்து திரிந்த குழந்தை திடீரென்று நிற்க மறக்கும். நடக்க முடியாது. கால்கள் வலு இழந்து செயல் இழக்கும்.

வைரஸ் கிருமிகள் கைகளை இயக்கும் நரம்பணுக்களையும் தாக்கி இருந்தால் குழந்தை கைகளைத்தூக்க முடியாமல்சிரமப்படும். அதேமாதிரி

நன்றி - ஹெல்த்

கீழ் வானில் கதிரவன் மேலேறிக் கொண்டிருந்தான். வெப்பம் நிமிடத்துக்கு நிமிடம் கூடிக்கொண்டிருந்தது. தென்னங்கீற்றில் வாயுபகவானின் வாத்திய ஒலி. நாய் ஒன்று தெருவைக் கடந்து அந்தக் கட்டிடவளவுக்குள் நுழைந்தது. வளவுக்குள் நின்ற நாய்க்கு ரோசம் பிறிட்டது. ஒரே கலாட்டா ''அடி அடி'' என்று விரட்டினார் சின்னப்பு. ''சின்னப்பு அதுகளை ஏன் கலைக்கிறாய் எங்களுக்கும் பொழுது போகுதில்லை. இதுவும் ஒரு சண்டைக் காட்சிதானே. பாப்பம் பொறு'' என்று கூறிவிட்டு குனிந்து ஒரு கல்லெடுத்து எறிந்தார் பரமு.

மீண்டும் அங்கே உக்கிரமான சண்டைநடந்தது சின்னப்புவுக்கு சிரிப்பு அடக்கமுடியவில்லை. சிரித்தார். சிரிப்புடன் கூடவே இருமலும் சேர்ந்து கொண்டது.

''உனக்கு இன்னும் சின்னப் பிள்ளைப் புத்தி போகவில்லை. பாவம் வாயில்லாத சீவன்கள்'' என்று சின்னப்பு நாய்களுக்கு பரிந்துரைத்தார்.

உங்கடை கதை பார்த்தியளே ஒரே சண்டையுடன் அவைபாட்டுக்கு போவிட்டினம். இல்லை யெண்டால் இந்த இடத்தை அசிங்கம் பண்ணிட உறுமிக் கொண்டல்லே திரிவினம்''

''பரமு நீ ஒரு யோசனையுமில்லாமல் சிரிச்சு முசுப்பாத்தி விடுகிறாய். என்னாலை அப்படியிருக்க முடியல்லை. நாங்கள் உழைச்சு பாடுபட்டு பிள்ளைகள் நல்லாயிருக்கணும் என்றும் காணி பூமியை வித்து வெளிநாட்டுக்கெண்டு அனுப்பினம் கடைசி நேரத்தில் இப்படி ஒரு நிலைமை. பழசுகளை நினைத்து கண்ணீர் விட்டார் சின்னப்பு.

''உங்களுக்கு விசர். இஞ்சை வந்தபோதே அதுகளை எல்லாம் மறந்திட்டு சந்தோஷமாயிருங்கோ. உங்களுக்கு என்ன குறை? சொல்லுங்கோ நான் உதவி செய்யிறன்''

''எனக்கு மனக்குறைதான் பரமு''

''உங்களுக்கு பென்ஷன் வருகுது. எனக்கு அது ஒன்றும் கிடையாது. நான் குடும்பத்திலையிருக்கையுக்கையும் இப்படித்தான். நல்லா குடிப்பேன். பிள்ளையளுக்கும், மனிசிக்கும் பிடிக்காது. பேசுவினம். அவையின்ரை உழைப்பை அன்றும் எதிர்பார்க்கலை இன்றும் எதிர்பார்க்கலை. எதிர்பார்ப்பு இருந்தாத்தானே துன்பம்''

''நீ சொல்லுறது சரிதான் பரமு. நான்நம்பி ஏமாந்து விட்டன்''

''நீங்கள் மட்டுமே. உங்கையிருக்கிறவை சிலன்ரைத் தவிர மற்றவை யாபேரும் அப்படிப்பட்டவைகள்''

''இந்த நேரத்திலை பணம் பெரிதில்லை பரமு. பிள்ளைகளின் அன்பும் ஆதரவும் தேவை''

''எல்லாரும் ஒரே மாதிரியிருப்பினமே: சில பிள்ளைகள் தான் பாசப் பிணைப்புடன் இருக்குதுகள். மற்றதுகள் எல்லாம் நாம் முன்பட்ட கடனுக்கு வந்ததுகள். அவைக்கும் இப்படி நிலைமை வரையுக்கைதான் விஷயம் தெரியும்''

# முகமற்ற மனிதர்கள்

''கண் கெட்ட பின் சூரியநமஸ்காரம் செய்வதால் புண்ணியமில்லை பரமு''

''உந்தக் கதையளை விடுங்கோ. அங்கை பாருங்கோ அவர் காலைத் தூக்கி நொண்டியடித்துக் கொண்டு வாறார்'' என்று குனிந்து கல் ஒன்றை எடுத்தார்.

## சிறுகதை

வசந்தியும், புருஷன், பிள்ளைகளும் வந்தநாட் தொடக்கம் அந்த வீடு கலகலப்பாயிருந்தது ஒரு பையனும், பெண்ணும் அவையிரண்டுபேரும் 'டொச்' மொழியில் 'கஸ் பிஸ்' என்று பேசிக்கொள்வதை எல்லோரும் வேடிக்கை பார்ப்பதைப் பார்த்து வசந்தி மகிழ்ச்சியடைவாள். அதுகளுக்கு தமிழ் தெரியாது என்று பரமேஸ் என்ற தகப்பன் பரமேஸ்வரன் பெருமையுடன் கூறுவான்.

புலம் பெயர்ந்த எம் மக்களின் பொருளாதார வளர்ச்சியும், கலாச்சாரங்களும் ஐரோப்பிய நாடுகளில் கொடிகட்டிப் பறக்கும் அதே வேளையில் கலாச்சாரப் புதை குழிகளும் தோண்டப்படாமல் இல்லை என்பதை சிலமனங்கள் வேதனையுடன் கூறிக்கொள்ளவும் தயங்கியதில்லை.

பிழைப்புக்கு வழிதேடிச் சென்ற அரைகுறை வேதியர்களும், வியாபாரிகளும் உழைக்கும் நம்மவனுக்கே தண்ணிகாட்டும் கலாசார வளர்ச்சிகளே காணப்படுகின்றன. என்று முணுமுணுக்கிற உள்ளங்களும் இல்லாமல் இல்லை.

''வசந்தி! நான் வந்து மூன்று நாளாச்சு. எங்கடைவீட்டுக்குப் போய் எப்படி என்று பார்த்துவிட்டு வாறேன்''

''இப்பபோய் அங்கை என்ன செய்யப் போறியள்?'' மனைவியின் கேள்வியில் ஒரு கணம் தயங்கிவிட்டு புறப்பட்டான் பரமேஸ்வரன்.

மோட்டார் சைக்கிளில் கம்பீரமாக வந்து வீட்டுவாசலில் இறங்கியவன் வீட்டின் வளர்ச்சி கண்டு திகைத்தான். தான் பிறந்து வளர்ந்து ஓடி விளையாடிய வீடு. வெளிநாட்டுப் பணத்தில் புனராவர்த்தனம் பெற்று புதுப் பொலிவுடன் காட்சியளிப்பதைப் பார்த்து மகிழ்ந்தாலும், மனைவி வசந்தி கூறியது நான் அனுப்பின பணத்திலை வீடுதிருத்திக் கட்டி மகளுக்கும் கொடுத்துவிட்டிருக்கினம் பெற்றோர் என்பதால் மனதில் சற்று வேதனைதான்.

## கே. எஸ். ஆனந்தன்

வேலிக்குப் பதிலாக மதில். நவீன பாணியில் கேற் தூணின் மேல் இரு பக்கமும் சிறுயானைப் பொம்மைகள். உள்ளே குறோட்டன்களும், பல் வேறு வர்ணங்களில் ரோஜாக்களும் பார்க்க அழகாகத்தானிருந்தது. மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டும் ஒருவரும் வரவில்லையே என்ற கவலையுடன் நிமிர்ந்தவன் முன் ஹோலில் யாரோ நிற்பதைப்பார்த்து உள்ளே சென்றான்.

''வாருங்கோ. யாரைப் பார்க்கணும்?'' என்றான் உள்ளே நின்றவன்.

''சின்னப்பு மாஸ்டர் வீடு தானே.....''

''சின்னப்பு மாஸ்டர்? ஓ...... அவரா? அவருடைய மகளுக்கு சீதனம் கொடுத்தவர். அவை வெளியிலை போறதுக்காக விற்றபோது நாங்கள் வாங்கினம். நாங்கள் தான் திருத்தவேலைகள் செய்தது. உட்காருங்கோ நீங்கள்......'' என்று அவனைப் பார்த்தான்.

''ஓ...... வெறிசொறி. நான் அவைதான் இங்கே இருக்கினம் என்று...... அவருடைய மகன் சொல்லிப் பார்க்க வந்தனான்''

''மாஸ்டரின் மகனே சொன்னவர்.''

''ம்''

( 8ம் பக்கம் பார்க்க )

# மணிமொழிக் கதை

## நேர்மைக்கு கூலியா?

தொழில் ஒன்றும் கிடையாது ஏழை ஒருவன் வேலை தேடிச்சென்ற போது ஒரு பழத்தோட்டத்திற்கு காவலாளியாகக் கடமைபுரிய இடம் கிடைத்தது. அவன் தனது கடமையில் கண்ணும் கருத்துமாய் இருந்தான்.

ஒருநாள் அத்தோட்டத்தின் முதலாளி வந்து தனது தோட்டத்தில் உள்ள நல்ல பழத்தில் இரண்டைப் பிடுங்கி வரும்படி காவலாளியிடம் கூறினான்.

காவலாளி உடனே இரண்டு பழத்தைப் பிடுங்கி முதலாளியிடம் கொடுத்தான்.

முதலாளி அப்பழங்களை சாப்பிட்டுப் பார்த்த போது அவை புளிப்புத்தன்மையாக இருந்தன. முதலாளி உடனே காவலாளியிடம் நீ இவ்வளவு காலமும் காவலாளியாக இருந்திருக்கிறாய். இந்தத் தோட்டத்தில் உள்ள பழங்களின் இனிப்பையும், புளிப்பையும் வித்தியாசம் காணவில்லையா? என்று கேட்டார்.

அதற்குக் காவலாளி நான் தங்களின் தோட்டத்தில் காவலாளியாக வேலை செய்ய வந்தேனே ஒழிய தோட்டத்தில் உள்ள பழங்களின் இனிப்பையும், புளிப்பையும் அறியவல்ல என்று கூறினான்.

இதனைக் கேட்ட முதலாளி அவனது நேர்மையில் சந்தோஷம் அடைந்து கூலியைஉயர்த்திக் கொடுத்தார்.

ஆனால் காவலாளி அதற்கு உடன்படாமல் ''ஐயா நான் எனது கடமையைத் தான் செய்தேன் எனவே எனக்கு நேர்மைக்காக நீங்கள் கூலியை உயர்த்தித்தர வேண்டாம்'' என்று கூறிவிட்டு முதலாளியின் பதிலுக்கும் காத்திராமல் தோட்டத்தில் இருந்து வெளியேறிச் சென்றுவிட்டான்.

நன்றி - மணிமொழிக்கதைகள்

## உலகில் உள்ள சுரங்கப் பாதைகள்

| | ஆண்டு | நாடு | நகரம் |
|---|---|---|---|
| 1. | 1863 | இங்கிலாந்து | லண்டன் |
| 2. | 1868 | அமெரிக்கா | நியூயோர்க் |
| 3. | 1900 | பிரான்ஸ் | பாரிஸ் |
| 4. | 1910 | ஹங்கேரி | புடாபெஸ்ட் |
| 5. | 1927 | ஜப்பான் | டோக்கியோ |
| 6. | 1933 | ஜப்பான் | ஓசாகா |
| 7. | 1935 | ரஷ்யா | மொஸ்கோ |
| 8. | 1969 | மெக்ஸிக்கோ | மெக்ஸிக்கோசிட்டி |
| 9. | 1974 | பிரேஸில் | சாவ்பாவ்லோ |
| 10. | 1974 | தென்கொரியா | சியோல் |
| 11. | 1984 | இந்தியா | கல்கத்தா |

தொகுப்பு செ. ஆனந்தி

# உங்களுக்குத் தெரியுமா?

## உயில்

''உயில்'' எழுதும் பழக்கத்தை உரோமானியர்களே உலகில் முதன் முதலாக அறிமுகப்படுத்தினார்கள்.

''உயில்'' என்பது ஒருவர் இறந்த பின்னர் அவரது சொத்துக்களுக்கு யார் வாரிசு என்பதைக் குறிப்பிடும் உரிமைப்பத்திரமே யாகும்.

உலகிலேயே எழுதப்பட்ட மிகப்பெரிய உயிலாகக் கருதப்படுவது; அமெரிக்காவில் திருமதி பிரடெரிக்காகுக் என்ற பெண்மணி இறக்கும் போது எழுதிய உயிலாகும். 96 ஆயிரம் வார்த்தைகள் அடங்கிய இந்த உயில் 4 பாகங்களாகத் தொகுக்கப்பட்டுள்ளது.

## மனிதனைக் கொல்லும் நோய்கள்

உலக சுகாதார நிறுவனம் (WHO) பட்டியில் இட்டுக்காட்டியுள்ள மனிதனைக் கொல்லும் நோய்களில் மிக முக்கியமானவை —

- இதய நோய்கள்
- புற்றுநோய்
- நிமோனியா
- சிறுநீரகக்கோளாறுகள்
- மூளைக்கட்டிகள்
- முதுகுத்தண்டுக்கோளாறுகள்
- எலும்புருக்கிநோய்
- விபத்துக்கள்.

## மூன்று நிமிடத்துக்குள்

அதிவேகமாக முன்னேறி வரும் மேற்கு ஜேர்மனியில் மூன்று நிமிடத்துக்குள் 27 லட்சம் ரூபா மதிப்புள்ள பொருள்கள், 42 தொன் எடையுள்ள சீமெந்தும், 15000 லீற்றர் டீசல் எண்ணையும், 100 சதுர அடி புகைப்பட சினிமாபிலிமும், உற்பத்தியாகின்றன

இது தவிர, 3 ஜோடி படுக்கை விரிப்புகள், 4 தையல் மெஷின்கள், 9 சைக்கிள்கள், 10 புகைப்படக்கருவிகள், 15 மோட்டார் கார்கள், 18 ரேடியோக்கள், 87 கடிகாரங்கள், 34800 ஜோடி கால் உறைகள்.

## உலகில் மிகப்பெரியவை

மிகப்பெரிய காடு ரஷ்யாவின் வடக்குப் பகுதியில் உள்ளது இதன் மொத்தப் பரப்பு 270,00,00,000 ஏக்கர்களாகும். இது உலகில் உள்ள மொத்த வனப்பரப்பில் 25 சதவீதமாகும்.

மிகப்பெரிய விமான நிலையம் சவூதி அரேபியாவில் உள்ள மன்னர்காலித் சர்வதேச விமானநிலையமாகும். விஸ்தீரணம் 86 ச. கி மீற்றராகும்.

அதிவேகவிமானம் 'கான்கார்ட்'' சுப்பர்சோனிக் விமானமாகும். இவ் விமானம் 1969 ல் முதன் முதல் பறந்தபோது மணிக்கு 2,333 கி. மீ வேகத்தில் பறந்தது.

## முகமற்ற மனிதர்கள்...

( 6ம். பக்கத் தொடர்ச்சி )

அவர்களுக்கு போய் சொல்லுங்கோ. உங்க அம்மா செத்துப் போய்விட்டாவாம் மாஸ்டர் மக்களின் கடிதங்களை எதிர்பாத்து ஏமார்ந்தார். கடைசியிலை இருந்த வீட்டாலும் அவரைத் துரத்தினார்கள். நான் இங்கை கூட்டிவந்து வைத்திருந்தேன். ரோஷக்கார மனிதன் சொல்லாமல் கொள்ளாமல் எங்கேயோ போய்விட்டது. பிள்ளைகளாம் பிள்ளைகள் பார்க்கச் சொன்னான்களா? அந்த மனிதருக்குப் போய் இப்படிப்பட்ட பிள்ளைகளா..?

வெறிசொறி மிஸ்டர். நான் மாஸ்டர் பட்டகஸ்டத்தைப் பார்த்து கதைத்துப்போட்டன்'' என்றான்.

பரமேஸ்வரன் சுய உணர்வற்ற ஜடமாய் சென்று வண்டியை எடுத்தான். தெரிந்த இடங்களுக்கு எல்லாம் போகவில்லை. போனால் வரவேற்பு எப்படியிருக்கும் என்று உணர்ந்து கொண்டு மனைவி வீட்டுக்கே போனான்.

எவ்வளவு குதூகலத்துடன் புறப்பட்டானோ அதற்கு எதிர்மாறான சோர்வுடன் வந்து கட்டிலில் விழுந்தான். அவன் மனம் அவனை வாட்டியது எப்படி வாழ்ந்த குடும்பம் எப்படி மற்றவர் இப்படி தூற்றிப் பழிக்குமளவுக்கு வந்துவிட்டதே என்று துடித்தான்.

என்னங்க? ஏன் ஒருமாதிரி இருக்கிறீர்கள்? என்ன நடந்தது? வீட்டிலை ஏதும் பேசினாங்களா?'' வசந்தி கேட்டாள்.

''ஒன்றுமில்லை நீபோ'' என்றான்.

''அங்கே போகாதேயுங்கோ என்றுசொன்னால் கேட்டாலதானே? போய்விட்டு வந்து ஏன்... '' என்று அவள் முடிக்கு முன்பு எழுந்து அவள் கைகளைப் பிடித்து பல்லை நெருமியவன்,

'' மரியாதையாய் பேசாமல் போ '' என்று கூறிவிட்டு ஓர் சிகரட்டை எடுத்துப் பற்றவைத்தான்.

அப்பா கடிதம்போடாமல் விட்டுவிட்டார் என்று தான் அவனும் போடவில்லை இடையில்போட்டவையும் கிடைத்திருக்காது. அப்படியானால் வசந்தி தான், வந்த கடிதங்களை ...... என்றுநினைத்தபோது... அடிவயிற்றை எதுவோ பிசைந்தது. அந்த மண்ணில் இந்த நினைவுகள், உணர்வுகள் ஏன் வரவில்லை. பிறந்த மண்ணில் மிதித்ததும் தான் பந்தம், பாசம் என்ற நினைவுகள் உறுத்துகின்றன ... ? இனம்புரியாத வேதனை தவிப்பு. எங்கே போவான் ? எப்படி தேடுவான் ?

அன்னை இறந்த செய்தி வந்திருக்கும். வசந்தி ஏன் மறைத்தாள் ? தன் வீட்டார் செய்திகளை கூறுபவள் ஏன் ...... ? எல்லாம் பிறவிக்குணம் ...... ! தம்பியாட்கள் என் சொல்லை கேட்டுவிட்டுத்தானே......? அப்பா நீங்கள் எங்கே ... ? திடீர் என அவன் மூளையில் ஓர் பொறி தட்டியது.

அவனுடைய மோட்டார் சைக்கிள் காற்றைக் கிழித்துக் கொண்டு கைதடி நோக்கிப்பறந்தது. அதைவிட அவன் மனம் விரைந்தது. கைதடியில் அமைந்துள்ள வயோதிபர் இல்ல வாசலில். வண்டியை நிறுத்தினான். உள்ளே சென்று விசாரித்தான்.

'' நீங்கள் சின்னப்பு மாஸ்டரைத் தானே கேட்டீங்கள். அவர் இப்போது ஆபத்தான நிலையில் இருக்கிறார். சுய அறிவு இல்லை. நீங்கள் அவருக்கு உறவா ? '' என்றார் அங்கிருந்தவர்.

'' நான் சுவிஸிலிருந்து வந்தனான். அவர் ...... ... '' என்று கூறுவதற்குள் பரமு ஓடிவந்து '' தம்பி மாஸ்டர் மண்டையை போட்டுவிட்டார்' பாவம் கடைசி நிமிடம் வரையில் பிள்ளைகளின். நினைவுதான் அந்த நல்ல மனிதனுக்கு இப்படிப்பட்ட பிள்ளைகளா பிறக்கணும் ? ' என்று கண்ணீர் விட்டார் பரமு.

''ஏன் அப்பு உங்கடை பிள்ளைகள் எப்படி ? ''என்று சிரித்துக்கொண்டே கேட்டார் இல்ல நிர்வாகி

'' தம்பி நான் குடிகாரன். குடும்பத்தைப் பற்றியே சிந்திக்காதவன். ஆனாலும் என்பிள்ளைகள் வந்து போறான்கள் என்னைவைத்துப் பராமரிக்க பொருளாதார வசதியில்லாததுகள். இவங்கள் ...... '' என்று துவாயை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டார்.

''இவர் அவரைத் தேடித்தான். வந்தார். அதற்கிடையில் '' என்று கூறினார் நிர்வாகி ?

''தம்பி நீங்கள் ......'' பரமுகேட்டார்.

ஒரே ஒரு கணம் தான். பரமேஸ்வரன் துணுக்குற்றான். தன் மானம், மரியாதை காப்பாற்றப்படவேண்டும். என்றால் ..... மனதைக் கல்லாக்கி கொண்டு நான் வெளிநாட்டாலை வந்தனான். அவருடைய மக்கள் .... '' என்று நிறுத்தினான்.

'' அவையளுக்கு போய் சொல்லும் இங்கைநடந்ததைவாரும்என்னோடை நீராவது வந்து பாரும் அந்தமனிதரை எனக்கு இப்படி ஒரு அப்பன் இருந்தால் கோவில் கட்டி கும்பாபிஷேகம் செய்வேன் '' என்றுகூறி முன்னே சென்றவரை பின்தொடர்ந்த பரமேஸ்வரனின் கண்களில் நீர் முத்துக்கள் விழுவதற்கு தயாராயிருந்தன.

---

### பெண்கள் தம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரு.கே. பரநிருபசிங்கம், வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதிக. பொன்னம்பலம் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

மனைப் பொருளியல் பயிற்சி நெறியில் சித்திபெற்ற மகளிர்களுக்கான சான்றிதழ்களை மதநன்மை விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள், கௌரவவிருந்தினர்களாகக் கலந்து கொண்ட மாவட்ட கூட்டுறவுச்சபை பணிப்பாளர்கள் மற்றும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தார்கள்.

மாவட்டச் செயலாளர் திரு. சு. சிவசுப்பிரமணியம் நன்றி கூறினார். கூட்டுறவு மகளிரின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றுள்ளன.

---

### வீரசிங்கம் மண்டபத்தை...

(1ம் பக்கத்தொடர்ச்சி

யாழ். மாவட்டத்தின் கூட்டுறவுச் சின்னமாக விளங்கிய வீரசிங்கம் மண்டபத்தை புனரமைப்புச் செய்வதற்கு கௌரவஜனாதிபதி கூட்டுறவு அமைச்சர், கூட்டுறவுத்திணைக்களம், தேசிய கூட்டுறவுச்சபை, அரச அதிபர், அரசசார்பற்ற நிறுவனங்கள் என பல்வேறு நிறுவனங்களிடம் நிதி உதவி கோரி அவற்றைப் பெறநடவடிக்கை எடுத்துள்ளோம்

கூட்டுறவாளர்களின் பெருமுயற்சிகளின் பலனாக உருவாக்கப்பட்ட இம் மண்டபத்தின் புனருத்தாரண வேலைகளுக்கு கூட்டுறவாளர்களின் ஆன்மீக பலமும் அவசியம் தேவைப்படுவதினால், கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் அனைவரிடமும் இருந்து ஒருமாதப் படியையும், கூட்டுறவுச் சங்க நெறியாளர்களின் ஒரு கூட்டத்தின் படியினையும், கூட்டுறவுப் பணியாளர்களிடமிருந்து ஒரு நாள் சம்பளத்தினையும், கூட்டுறவுச் சங்க அங்கதவர்களிடமிருந்து அவர்கள் விரும்பிய தொகையையும் பெறுவதற்க அனைத்து நடவடிக்கைகளும் எடுத்துள்ளோம்.

எனவே இவ் அரிய கைங்கரியத்திற்கு அனைத்துக் கூட்டுறவாளர்களினது ஒத்துழைப்பினையும், ஆதரவினையும் நாடி நிற்கிறோம் என்று அவ்வேண்டுகோளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

(2ம் பக்கத் தொடர்ச்சி)

### அமரர் சி. இராசேந்திரம்......

உறுப்பினராகவும் யாழ் மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி பழைய மாணவர் சங்க நிர்வாகசபை உறுப்பினராகவும் இருந்து சமூக சமய பணிகளில் இறுதிவரை சேவையாற்றி வந்தார்.

'நோயிற்றளராமல் நொந்துமனம் வாடாமல் பாயிற்கிடவாமல் '' திடீரென ஏற்பட்ட நோயினால் இவ்வுலகி வாழ்வைவிட்டு இறைபதம்மடைந்தமை அவரது குடும்பத்தினர்க்குமட்டுமல்லாமல் அவரது சேவையைப் பெற்ற அனைவருக்கும் பேரிழப்பாகும்.

கூட்டுறவாளன்

# அமிர்தம் குடித்த மரம் - வேம்பு

மண்ணுலகில் இருந்து தேவர் உலகுக்கு ''அமிர்தத்தை'' எடுத்துச் செல்லும்போது அதில் சில துளிகள் வேப்பமரத்தில் விழுந்ததாகவும், அதனால் வேம்பு நல்ல மருத்துவக் குணமும், நோய் எதிர்ப்புத் தன்மையும் பெற்றதாக புராணங்களில் கூறப்படுவதை உண்மையென டெல்லியில் உள்ள வேளாண்மை ஆராச்சி நிறுவனம் கண்டறிந்துள்ளது.

வேம்பின் சகலபொருள்களும் - வேப்பம் பூ முதல் பட்டை வரை - அனேகமாக எல்லா வியாதிகளுக்கும் பயன்படக்கூடிய தென்பதைபண்டைக் கால ஆயுர்வேதக் குறிப்புகளில் இருந்து அறியமுடிகிறது.

## வேம்பின் மருத்துவக் குணங்கள்

❁ வேப்பம்பட்டை வாந்தி, குமட்டல் (*Nausea*) தோல் சம்மந்தமான வியாதிகள், அல்சர் போன்ற வியாதிகளுக்கும், கலவையாகவும், களிம்பாவும், நோய் எதிர்புச் சக்தியாகவும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது

❁ வேப்பிலைக் களிம்பு காதுவலி, கிளாண்டுலர் டியூமர், (*Glandu) lartumours*) முகப்பருக்கள், சின்னம்மை, மஞ்சள்காமாலை, கொப்புளங்கள், அல்சர் ஆகியவற்றுக்குச் சிறந்த நிவாரணி.

❁ வேப்பம் இலையின் இளந்தளிர்களை சாப்பிடுவதினால் இரத்தம் சுத்தமாகும்.

❁ வேப்பெண்ணை காசநோய், முடக்குவாதம், போன்றவற்றுக்கு சிறந்த மருந்தாகும்.

❁ வேப்பெண்ணயில் அடங்கியுள்ள ''நிம்பிடின்'' (*Nimbidin*) என்ற பொருள் பல்வேறு தோல்வியாதிகளைக் குணப்படுத்தும்.

❁ வேப்பெண்ணை குடித்தால் வயித்துப் புண் குணமடையும்; உடலில் ஏற்படும் காயங்களுக்கு வேப்பெண்ணை தடவினால் காயம் குணமாவதுடன் காயத்தால் சிதைவடைந்த பகுதிகளில் புதிய தோல் வளர்வதற்கும் உதவும்.

ஆதாரம் - ஹெல்த்

தொகுப்பு — வசி.

# பொருளாதார அபிவிருத்தியும்...

( 4ம் பக்கத் தொடர்ச்சி )

தொழில் முயற்சிகளின் தொடக்கத்துக்கும் சிற்றுடமை முதலீட்டாளரின் வளர்ச்சிக்கும் அடிப்படையானது. உற்பத்தி முதலீட்டு துறையிலும் உற்பத்தியாளர் என்ற பேரளவு முதலீட்டுக்கான தகுதியை சுதேசிகள் பலரும் கொண்டிராத சூழ்நிலையில் சுதேச முதலீட்டை திரட்டுவதிலும் நுகர்வோர் முதலீட்டை திரட்டிப் பெரும் முதலீட்டுக்கான வாய்ப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்க அமைப்புகளினூடாக உருவாக்கப்பட்டுள்ளது.

## கூட்டுறவுச் சங்கங்களின் பங்களிப்பு

உற்பத்திப் பொருள்களுக்கான சந்தைப்படுத்தல் மற்றும் உள்ளீட்டுப் பொருட்களினது தடையற்ற விநியோகம் என்பனவற்றை உறுதி செய்யும் போக்கில் விளை பொருள் விற்பனைச் சங்கங்கள் உருவாக்கப்பட்டன. இந்த அமைப்புக்கள் உத்தரவாதச் சந்தை ஒன்றை இளம் தொழில்களுக்கு பெற்றுக் கொடுப்பதில் பாரிய பங்காற்றியிருந்தன. பின்னராக துறை ரீதியான வளர்ச்சியினை ஏற்படுத்துவதிலும் வேலை வாய்ப்பை உருவாக்குவதிலும் கிராமிய மட்டத்திலான மூலவளங்களை அடிப்படையாகக் கொண்ட சங்கங்கள் பல செயற்படத் தொடங்கின. பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், மட்பாண்ட உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், தெங்கு பனம் பொருள் உற்பத்தி கூட்டுறவுச் சங்கம், புகையிலை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம், கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், பழவகை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் போன்றன இந்த நோக்கத்துக்கான பங்களிப்பில் பெரும் பங்காற்றி வருகின்றன.

இதே போல சேவைத் துறை சார்ந்து உள்ளார்ந்த கட்டமைப்பை பெற்றுக் கொள்ளாத பல கிராமங்கள் பல இப்போதும் எமது நாட்டில் இருந்து வருகின்றன இருபதாயிரம் வரையிலான எமது கிராமங்களில் புராண கிராமங்களாக கைவிடப்பட்ட பல கிராமங்களில் அபிவிருத்திக்கான தொழிற்பாட்டில் தூண்டுதலை வழங்கக்கூடிய கல்வி, சுகாதாரம், போசாக்கு, தொடர்புசாதனங்கள், வீதி அபிவிருத்தி, போன்ற செயல் துறைகளில் ஈடுபடும் முதலீட்டுக்கான இலாபம் பெற முடியாத நிலையில் தனியார் துறையினால் புறக்கணிக்கப்பட்டிருப்பதுடன் அரச துறையிலும் போதிய வாய்ப்புக்களை பெற இயலாதுள்ளன. இந்த இடைவெளியினை நிறைவு செய்வதற்காக ஆரம்பம் முதலே கூட்டுறவுத்துறையின் பங்கு பெருமிதத்துக்குரியதாகும். யாழ்ப்பாண தீவுப்பகுதிப் படகுச் சேவைச் சங்கம், யாழ். துறைமுக சேவைச் சங்கம் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை, வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச்சபை, பாடசாலை கூட்டுறவுச் சங்கங்கள் போன்றன முழுநிலை சேவைத் துறைசார்ந்த கூட்டுறவு அமைப்புக்களாகும். இதனுடன் பல நோக்கு தனிநோக்கு சங்கங்களும் தமது முதலீட்டில் பெரும் பகுதியினை சேவைத் துறைசார்ந்து முதலிட்டிருப்பதும் நினைவிடத்தக்கது. சமகாலத்தில் கூட்டுறவுக் கொள்கைகளில் ஒன்றான ஆதரவுக்கேற்ப தள்ளுபடி என்பது அங்கத்தவனுக்கு வழங்கப்படுவதில்லை, என்ற குறை கூறப்பட்டிருப்பினும் அங்கத்தவனின் சேவைத் துறைக்கு வழங்கப்படும் ஆதரவு மூலம் இந்த ஒதுக்கீடு மீளப் பங்கிடப்பட்டு வருவதும் அது சேவைத் துறைசார்ந்த பங்களிப்பில் மேலும் சங்கங்கள் ஈடுபடுவதும் குறிப்பிடத்தக்கது.

கைத்தொழில் துறை சார்ந்து பொருத்தமான தொழில் நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட சுதேச தொழிற்சாலைகள் பலவற்றிலும்கூட்டுறவுஅமைப்புக்கள் வெற்றிகண்டிருக்கின்றன. இதுகுறித்த சங்கங்களின் அங்கத்துவ நன்மைக்காக மட்டுமன்றி தேசிய மட்டத்தில் ஏற்றுமதி வருவாய்களை பெற்றுத்தரும் தொழில்களாக கூட மாற்றமடைந்துள்ளது பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களின் சீனி உற்பத்தி ஆலைகள், மதுசார உற்பத்திச் சாலைகள், பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் நெல் குற்றும் ஆலைகள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் கடல்கல உற்பத்தியாலைகள், கடலுணவு பதனிடும் ஆலைகள், விவசாயச் சங்கங்களின் எண்ணை ஆலைகள், அரைக்கும் ஆலைகள். உள்ளீட்டு பொருள் உற்பத்திச்சாலைகள், பண்ணைத் தொழில்கள் போன்றன துறைசார்ந்த காத்திரமிக்க பங்களிப்பை வெளிப்படுத்தும் சில குறிகாட்டிகளாகும்.

இருந்த போதிலும் கூட்டுறவுக் கோட்பாட்டின் உயர்ந்த இலட்சியங்கள் பொருளாதார சமத்துவத்தை பெறுவதுடன் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை பெற்றுக் கொடுக்கும் ஒரு சமூக அமைப்பாகவே வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது

வாட்கின்ஸ் என்ற அறிஞர் கூட்டுறவு பற்றி கூறுவதுபோல் ஒற்றுமை சிக்கனம், ஜனநாயகம், நாணயம், நியாயம், சுதந்திரம் ஆகிய அம்சங்களை அடிப்படையாக கொண்ட சமூக அமைப்பின் நிறைவு என்பது சாதிப்பதற்கான இலக்குகள் இன்னும் நிறையவே உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பணமுகாமைத்துவம்...

( 3ம் பக்கத் தொடர்ச்சி )

4 காசுச் சேகரிப்பு முறையின் பலவீனமும் பண முகாமையைப் பாதிக்கும். கடன் விற்பனையை மேற்கொள்ளும் போது கடன் பட்டோரின் நாணயத்தன்மையை கருத்திற் கொள்ளாமல் கடன் வாங்கியிருந்தால் அல்லது கடன் பணம் சேகரிப்பதை திறமையாக மேற்கொள்ளாதிருந்தால் பணம் சேகரிப்பதில் வீழ்ச்சி ஏற்பட்டு விடும் இது அறவிடமுடியாத கடனை அதிகரிப்பதுடன் பணப் பெறுவனவிலும் பாதிப்பைக் கொண்டு வரும்.

5 செலவீனங்களைக் கட்டுப் படுத்த முற்படாமை பண முகாமைத்துவத்தைப்பாதிக்கும். நிறுவனங்களில் வழமையாக ஏற்படும் நிலைய நிர்வாக, விற்பனை விநியோக நிதிச் செலவுகள் திட்டமிடப்படாமல்இருந்தால் அவை எதிர்பார்க்கப்பட்ட செலவுகளை விட உயர்வாக இருக்க வேண்டி ஏற்படலாம் இது பணமுகாமைத்துவத்தினைப் பாதிப்பதாக அமையலாம்,

## பணமுகாமையைச் சீர் செய்தல்

பணமுகாமைத்துவத்தைத் திறனுள்ளதாகக் கொண்டிருத்தல் எல்லா நிறுவனங்களுக்கும் அவசியமாகும். இதன் காரணமாகவே தற்காலத்து நிறுவனங்கள் இதற்கென பல நடவடிக்கைகளைக் கையாள முன்வந்துள்ளன. அவற்றுள் பின்வருவன முக்கியம் பெறும்.

1 சிறிய அளவான முயற்சிகள் சொந்தப் பணநடவடிக்கைகளை வியாபார நிறுவனத்தின் பணத்துடன் கலக்க விடுகின்றன. இது சொந்த வருமானத்தைக் கணக்கிலிடுவதும் பின் சொந்ததேவைக்கு வியாபாரத்திலிருந்து பணத்தை வெளியே எடுப்பதுமான நடவடிக்கைகளுக்கு வழி வகுக்கும். இதனைத் தவிர்த்து சொந்தப்பணத்தைத் தனியாகவும் வியாபாரப் பணத்தை வேறாகவும் கொண்டிருத்தல் சிறப்பான பண முகாமைத்துவத்துக்கு வகை செய்யும்.

2 கொடுக்கல் வாங்கல்களை வங்கி மூலம் மேற்கொள்ளல் சிறந்த பண முகாமைக்கு வகை செய்யும் இதற்கமைய எல்லாப் பணப் பெறுவனவுகளும் நாளாந்தம் வைப்பிலிடப்படுவதுடன் கொடுப்பனவுகளுக்கு காசோலை வழங்கப்படும். இதன் ஊடாக வங்கிமூலமே சிறந்த கணக்கு வைப்பை கையாள முடிவதுடன் ஏற்படக்கூடுமென்ற மோசடிகளிலிருந்தும் பாதுகாப்பைப் பெற முடியும்

3 முற்பணமுறைச் சில்லறைக் காசேட்டைப்பயன்படுத்துவது பண முகாமையைச் சீராக்கிவிடும். நாளாந்தம் ஏற்படக்கூடுமென்ற சிறுதொகைச் செலவுகளைச் சமாளிக்க கையில் ஒரு தொகைப் பணத்தை தனியாகவைத்துக்கொள்ளல்வேண்டும். இதனைக் கொண்டு ஒரு மாதத்துள் வருகின்ற சிறு அளவான செலவுகள் சமாளிக்கப்படும். மீண்டும் செலவு செய்த தொகை மாத முடிவில் பெறப்பட்டு அடுத்த மாத ஆரம்ப மீதி வழமையான தொகைக்குக் கொண்டு வரப்படும்.

4 அறவிடமுடியாக்கடனை அனுமதிக்கும் செயற்பாட்டை உடனடியாக அமுல்படுத்தாமைபணமுகாமையில் அவசியமாகும் சாதாரணமாக அறவிட முடியாக் கடன் என்ற முடிவு எடுக்கப்படக் கூடாது. அத்துடன் அறவிட முடியாக் கடன்கள் மீள் பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும். அறவிட முடியாக் கடன்களை இயலுமான வரை குறைப்பது பண முகாமைத்துவம் சீரடைய வகை செய்யும்.

5 கொடுப்பனவுக்காக வவுச்சர்களை பயன்படுத்துவது பண முகாமைத்துவத்தைச் சீராக்கும். இவை ஒழுங்காகக் கோவைப்படுத்தப்படுவதுடன் அவற்றுக்கான கொடுப்பனவுகள் காசோலை மூலம் மேற்கொள்ளப்படும். அத்துடன் வவுச்சர் ஒவ்வொன்றிலும்கொடுப்பனவு செய்யப்பட்ட காசோலை இலக்கம் எழுதப்படல் வேண்டும். இதனால் கொடுப்பனவுகளில் மோசடி செய்யும் வாய்ப்புக்குறைக்கப்படும்.

6 வங்கிக் கணக்கிணக்கக் கூற்றைத் தயாரிப்பதும் பண முகாமைக்கு அவசியமாகும். வாடிக்கையாளன் பராமரிக்கும் வங்கிக்கணக்கும், வங்கி மாத முடிவில் அனுப்பி வைக்கும் வங்கிக் கூற்றுக்கு மிடையே காணப்படும் முரண்பாட்டை இணக்கம் செய்வது முக்கியமாகும். இதன் ஊடாக வங்கி அறவிட்ட வருமானங்களையும் செலுத்திய செலவுகளையும் இனம் காண முடிவதுடன் பொதுவான பதிவுக்குள்ளும் கொண்டு வரலாம். ஆனாலும் இந்த இணக்கக் கூற்றைக் காசாளர் போன்றோர் தயாரிக்கக் கூடாது. அதனால் மட்டுமே மோசடிகள் இடம் பெற்றிருந்தால் சுலபமாக கண்டுபிடிக்க முடியும்.

7 கணக்காய்வினைப் பின்பற்றுவதும் பண முகாமைக்கு அவசியமாகும். உள்ளகக் கணக்காய்வு மூலமும், வருடாந்த கணக்காய்வு மூலமும் மோசடிகளையும் தவறுகளையும் இனம் கண்டு நிவர்த்திக்க முடியும். கணக்காய்வின் மூலமே மோசடிகள் தவிர்க்கப்படலாம் என இருப்பதனால் ஒவ்வொரு நிறுவனமும் கணக்காய்வினை மேற்கொள்ள ஆயத்தமாக இருத்தல் வேண்டும். மோசடிகளும் தவறுகளும் கண்டு பிடிக்கப் படாதிருப்பது பணமுகாமையை பாதிப்புறச்செய்யும், இதற்காகவே கணக்காய்வு பண முகாமைத்துவத்தில் வலியுறுத்தப்படுகின்றது.

பண முகாமைத்துவம் சம்பந்தமான கருதுகோள் அண்மைக் காலத்தில் பிரபல்யம் பெற்று வருகின்றது. சிறிய அளவான நிறுவனங்களிலும் சரி, பாரிய நிறுவனங்களிலும் சரி, பணமுகாமை திறனற்றிருப்பது பல்வேறு பட்ட பாதிப்புக்களைக் கொண்டு வரும். நிறுவனத்தின் முழு வளர்ச்சியுமே பண முகாமைத்துவத்தில் தங்கியிருப்பதாக பலர் கருதுவதனால் அதற்கு தனியிடம் கொடுக்க வேண்டியநிலை உள்ளது. இதன் காரணமாகவே உலகின் எந்தவொரு நாட்டிலும் இயங்கும் நிறுவனங்கள் பண முகாமைத்துவத்திற்கு மதிப்பளித்து வருகின்றன. முகாமைத்துவத்தில் பணத்தை முகாமைசெய்வதென்ற கருதுகோள் பிரபலம் பெறுவதனால் பல்வேறுபட்ட நூல்களிலும் இக்கருத்தை வலியுறுத்தும் நிலை உருவாகி வருகின்றது. அபிவிருத்தியடைந்த நாட்டு நிறுவனங்கள் ஏற்கனவே கவனம் செலுத்திய பண முகாமைத்துவத்தில் குறைவிருத்தி நாட்டு நிறுவனங்கள் அக்கறை கொள்ள தொடங்கியுள்ளன, இதனால் எதிர் காலத்தில் எல்லா நிறுவனங்களுமே கவனம் செலுத்த வேண்டிய ஒரு விடயமாக பண முகாமைத்தும் மாறிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

> சுயநலமற்ற நன்மையின் அளவு தான், வெற்றியின் அளவை எல்லா இடத்திலும் நிர்ணயம் செய்கிறது.
>
> சுவாமி - விவேகானந்தர்.

# மரமுந்திரிகை பயிர்ச் செய்கை

மரமுந்திரிகையானது மேட்டு நிலங்களிலும் மணற் பிரதேசங்களிலும் சிறப்பாக வளரக் கூடிய ஒரு பெருந்தோட்டப்பயிர். இதனைச் செல்வந்தப்பயிர் என்றும் கூறுவார்கள். இலங்கையில் மட்டக்களப்பு, மன்னார், திருகோணமலை, வவுனியா, அனுராதபுரம், புத்தளம், அம்பாறை, மொனறாகலை, அம்பாந்தோட்டை, குருநாகல், மாத்தறை, பொலநறுவை போன்ற மாவட்டங்களில் அதிகளவில் செய்கை பண்ணப்படுகிறது. யாழ். மாவட்டத்திலும் குறிப்பாக வடமராட்சி, தென்மராட்சி வலிகாமம், மற்றும் தீவகப் பகுதிகளிலுள்ள உவர்த்தன்மையற்ற மணற்பாங்கான பிரதேசங்கள் இப் பயிர்ச்செய்கைக்கு சிறப்பான இடங்களாகும்.

மரமுந்திரிகைச் செய்கை மிகவும் இலகுவானதும், சிக்கனமானதும் அதிக இலாபத்தையீட்டக் கூடியதுமாகும். அத்துடன் இதன் பராமரிப்பு மிக இலகுவானது. அதாவது மரமுந்திரிகையை விலங்குகள் உண்பது மிகக்குறைவு. வரட்சியிலும் சிறப்பாக வளரக்கூடியது. அத்துடன் இதற்கு ஏற்படும் நோய்களைக்கட்டுப்படுத்துவதற்காக செலவிடப்படும் மருந்துகளும் பிரயோகங்களும் ஏனைய பயிர்ச்செய்கைகளுக்கு செலவிடப்படும் செலவினங்களை விட மிக மிக குறைவு. அத்துடன் இதற்கு பசளை குறைந்தளவிலேயே பயன்படுத்தப்படுகிறது. எனவே மேற்கூறியவற்றை நோக்கும் போது ஏனைய செய்கைகளுக்கான செலவினங்கள், விரயம், சூழல்மாசடைதல் போன்றவைகள் இப்பயிர்ச் செய்கையில் மிக மிக குறைவு என்றே கூறலாம்.

### மரமுந்திரிகையின் பயன்கள்

பதப்படுத்தப்பட்ட முந்திரிகைப் பருப்பு, விதைக்கோது எண்ணை (பூச்சிகொல்லியாக) ரனின் பவுடர் என்பன விதையில் இருந்தும் பழஇரசம், பழஜாம், வைன், வினாகிரி, மதுசாரம், பழவற்றல் என்பன பழத்தில் இருந்தும் பெறப்படக்கூடியவை.

### முந்திரிகை இனங்கள்

இலங்கையில் ரின்டாட், உலால், அனகாயம், விற்றால், சாந்திகுடு எனும் 5 இனங்கள் பயிரிடப்படுகின்றன. இவை விதை பழங்களின் அடிப்படையில் வேறுபடுத்தப்படுகின்றன.

### நிலத்தை தெரிவு செய்தல்

மரமுந்திரிகை வரண்ட பிரதேசத்திற்கு பொருத்தமான பயிர். அத்துடன் செய்கை பண்ணும் நிலமானது நீர் நன்றாக வடிந்து செல்லக் கூடிய அல்லது சமவெளி நிலமாக இருத்தல் வேண்டும். குறைந்தது ஒரு மீற்றர் ஆழமேனும் கற்பாறையற்ற மண்படை இருப்பது விரும்பத்தக்கது.

### நாற்றுமேடையும் பராமரிப்பும்

சிறந்த தாய் மரங்களிலிருந்து பெறப்பட்ட முற்றியவிதைகளை கிட்டத்தட்ட 24 மணிநேரம் நீரில் ஊற விட்டு பின்னர் மணல் மேடையில்; பழத்தில் விதை ஒட்டியிருப்பது போன்ற நிலையில் நாட்டி மேடையை தொடர்ந்து ஈரலிப்பாக வைத்திருக்க வேண்டும். 7 10 நாட்களில் முளைவேர் உருவானதும் அவற்றை கவனமாக பிடுங்கி காபன் சேர்த்த மண் (Compost) ஒருபங்கு, மணல் ஒரு பங்கு என்ற விகிதத்தில் கலந்த கலவையால் நிரப்பப்பட்ட 9''X6'' அளவுடைய பொலித்தீன் பைகளில் நாட்டுதல் வேண்டும். காலையும், மாலையும் நீரூற்றி, பூரணமாக

**ந. இராசவிசாகன M. Sc (Agri)**

நிழற்படுத்தி பின்னர் படிப்படியாக நீரினையும், நிழலையும் குறைத்து சுமார் 4 வாரங்களுக்குப் பராமரித்த பின்னர் நடுகைக்குப் பயன்படுத்தலாம். கன்று முளைத்து மூன்று கிழமைகளின் பின் ஒருதடவை 5 லீற்றர் நீரில் 60 கிராம் யூரியாவை கரைத்து பூவாளியால் கன்றுகளுக்கு விடுவதன் மூலம் கன்றின் வளர்ச்சியை அதிகரிக்கலாம்.

### நிலத்தை நடுகைக்காக தயார் செய்தல்

நிலத்தைதுப்பரவு செய்து 30X30 அடி இடைவெளியில் 2 X 2 X 2 அடி என்ற அடிப்படையில் குழிகளை வெட்டி அக்குழியினுள் உக்கிய குப்பைகள், சாம்பல் போன்றவைகளை யிட்டு குழிகளை மூடி 15-20 நாள்களின் பின்னர் நாற்றை நடுகை செய்யலாம். ஒரு ஏக்கரில் 40 கன்றுகளை நடுகை செய்யும் வண்ணம் குழிகளை அமைக்க வேண்டும்.

### மர முந்திரிகை நடுகை

மூடிய குழியில் 9'' ஆழத்திற்கு பொலித்தீன் உறையை உள்ளடக்கக் கூடியதாக மறுபடி குழியமைத்து அதனுள் பொலித்தீன் உறையை அடிப்புறம் வெட்டி மரமுந்திரிகைக்கன்றை குழியுள் வைத்து சுற்றிவர மண்ணை யிட்டு மெதுவாக உறையை அகற்றி விட வேண்டும். நட்டபின் இலைகளினால் அல்லது ஓலைகளினால் நிழல் அமைத்து ஒரு வாரத்திற்கு பராமரிக்க வேண்டும். பின்பு நடப்பட்ட கன்றைச்சுற்றி ஈரலிப்பாக இருப்பதற்கு இலை குழைகளையிட்டு நீர் விட்டுப் பராமரிக்க வேண்டும்.

### பசளையிடல்

நடுகை செய்யும் போது மேற்பரப்பு மண்ணுடன் கலந்து பயன்படுத்தும் அடிக்கட்டுப் பசளையாக சுப்பர் பொசுபேற்று 2 பங்கு, மியூறியேற் ஒவ் பொட்டாஸ் 1 பங்கு கலந்த கலவையை கன்று ஒன்றுக்கு 55 கிராம் வீதம் கன்றைச்சுற்றி 10-15 சதம மீற்றர் இடைவெளியில் வட்டமாக போடவேண்டும்; பின்னர் யூரியா 1பங்கு, மியூறியேற்ஒவ் பொட்டாஸ் 1 பங்கு, சுப்பர் பொசுபேற்று 2 பங்கு என்ற விகிதத்தில் கலந்த கலவையில் 1, 2, 3, 4, வருட வயதுடைய கன்றொன்றுக்கு முறையே 250, 500, 750, 1000 கிராம் என்ற வீதத்தில் உபயோகித்து நீர் விட்டு பராமரிக்க வேண்டும்.

### நோய் பூச்சித்தாக்கங்களும் தீர்வுகளும்

பொதுவாக மரமுந்திரிகையானது நோய்களுக்கும், பூச்சிகளுக்கும் எதிர்ப்புத் தன்மை கொண்டிருந்தாலும் ஒரு சில நோய்களும் பூச்சிகளும் பயிரின் வளர்ச்சியிலும் விளைச்சலிலும் பெருந்தாக்கத்தை ஏற்படுத்துவதனால் அவற்றை அடையாளம் கண்டு கட்டுப்படுத்தல் முக்கியமானதாகும்.

பெரும்பாலும் பற்றீரியா, வைரசுக்களினால் எவ்வித பாதிப்பும் ஏற்படுவதில்லை எனினும் நாற்றுமேடைகளில் மழை அதிகமாக காணப்பட்டால் அடி அழுகல் நோயானது பங்

(12-ம் பக்கம் பார்க்க)

## மண்வளம்

Registered as a News paper at the G. P. O
SriLanka Under No K. J. V. 59/87

ஐக்கியதீபம் பங்குனி 1999

# கூட்டுறவு நிறுவனங்கள் பொருளாதார அபிவிருத்திக்கான தொழில்களில் ஈடுபட வேண்டும்

கூட்டுறவுச் சங்கங்கள் அத்தியாவசிய உணவுப்பொருள்களை மட்டும் மக்களுக்கு விநியோகம் செய்யும் வியாபாரநிலையங்களாகமட்டுமன்றி, நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு உகந்த தொழில் வாய்ப்புக்களை வழங்கும் நிறுவனங்களாக மாறி நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கு உதவும் நிறுவனங்களாக வளர்ச்சி அடைய வேண்டும்.

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையின் மாவட்டமகளிர்குழு நடாத்திய மனைப்பொருளியல் டிப்ளோமா பயிற்சி நெறியின் கைப்பணிப்பொருட் காட்சியை முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட மக்கள்வங்கி பிராந்திய முகாமையாளர் திரு. சி. இளம்பிறைநாதன் நாடாவை வெட்டி ஆரம்பித்துவைத்து உரையாற்றும் போது மேற்கண்டவாறு கூறினார்.

மாவட்ட மகளிர்குழுத் தலைவி திருமதி ரதிசோதிலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் திரு. சி. இளம்பிறைநாதன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

இன்றைய சூழ்நிலையில் காலத்தின் தேவையை அறிந்து அதற்கேற்ப தொழிற்பயிற்சிகள் திட்டமிட்டு வழங்கப்படவேண்டும் சுய தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கக் கூடிய வகையில் வேலைத்திட்டங்களைத் தயாரிக்கவும், அவற்றின்செலவினங்களை மதிப்பிடவும், முதலீட்டுக்கேற்ப வருமானம் கிடைக்குமா? என்பவற்றை எல்லாம் திட்டமிட்டு செயலாற்றக்கூடிய வகையில் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும் என்று கூறினார்.

இவ் வைபவத்தில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்ட கூட்டுறவுச்சபைத் தலைவர் திரு. பெ. கனகசபாபதி, பிரதான வீதி மக்கள் வங்கி முகாமையாளர் திரு. க. பாலச்சந்திரன் ஆகியோர் உரையாற்றினார்கள்.

மாவட்ட மகளி குழு உறுப்பினர் செல்வி செ. விஜயராணி வரவேற்புரையையும், மாவட்டச் செயலாளர் திரு. சு. சிவசுப்பிரமணியம் நன்றி உரையையும் நிகழ்த்தினார்கள்.

கண்காட்சிக்கு வைக்கப்பட்ட பொருட்களின் விற்பனையும் இடம் பெற்றது. பெருந்திரளானோர் கண்காட்சியைக் கண்டுகளித்தனர்.

ஆன்மிகத்தை மையமாகக் கொண்டேபெண் கல்வியைப் பரப்ப வேண்டும் மற்றத்துறைகளில் அளிக்கப்படும் பயிற்சிகள் அனைத்தும் ஆன்மீகப் பயிற்சிக்கு அடுத்தபடியாகவே இருக்கவேண்டும் ஆன்மீகப்பயிற்சி, நற்குணங்களைப் பெறுதல் பிரம்மசரிய விரதம் காத்தல் ஆகியவற்றை மிகவும் சிரத்தையுடன் கவனித்து ஆவன செய்யவேண்டும்,

''எங்கே பெண்கள் மதிக்கப் படுகிறார்களோ அங்கே தெய்வங்கள் மகிழ்ச்சியடைகின்றன. எங்கே அவர்கள் மதிக்கப்படவில்லையோ அங்கே எல்லாக் காரியங்களும், முயற்சிகளும் நாசமாகின்றன'' என்று மனு கூறுகிறார்,

சுவாமி – விவேகானந்தர்

## போட்டி முடிவுகள்

யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபையின் மாவட்ட மகளிர்குழுவினரால் நடாத்தப்பட்ட அனைத்துலக பெண்கள் தினத்தை ஒட்டி பாடசாலை மாணவர்கள், மகளிர் அங்கத்துவர்கள் ஆகியோருக்கிடையில் நடாத்தப்பட்ட பேச்சுப்போட்டி முடிவுகள் வருமாறு;

பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்ட பேச்சுப்போட்டியில்;

முதலாம் இடம், செல்வி லெஞ்சி யோகராசா யாழ். பெரியபுலம் மகாவித்தியாலயம், இரண்டாம் இடம் செல்வி ஜெ இராஜமல்லிகை வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம். மூன்றாம் இடம் செல்வி க. துர்க்கா உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

மகளிர் அங்கத்தவர்களுக்கான பேச்சுப் போட்டியில், முதலாம்இடம் செல்வி அ கனகரத்தினம் பருத்தித்துறை பல நோ. கூ. சங்கம், இரண்டாம் இடம் செல்வி வி. பகீரதி சிறுப்பிட்டி மாதர் சி. க. கூ. சங்கம் நீர்வேலி தெற்கு, மூன்றாம் இடம் செல்வி க. கலைவாணி சாவகச்சேரி ப. தெ. வ. அ. கூ. சங்கம்.

மர முந்திரிகை — 
(11ம் பக்கத் தொடர்ச்சி)

கசுக்களினால் ஏற்பட இடமுண்டு. 'கப்டான்'', '' அன்ர கோல் '', போன்ற பங்கசு நாசினிகளினால் இதனைக்கட்டுப்படுத்தலாம்.

கெலோபெல்டிஸ் எனும் நுளம்பானது பெரும்பாலும் மரங்களில் புதிதாக இளந்துளிர்கள் ஏற்படும் காலங்களில் அத்துளிர்களின் சாற்றினைக் குடிப்பதால் இலைகள் காய்ந்து காணப்படும். இதனைத் தடுக்க மரங்களில் புதிதாக துளிர் ஆரம்பித்து 3 கிழமைக்குள் ''செவின்'' (Sevin) எனப்படும் தூள் மருந்தை ஒரு ஏக்கருக்கு 5 கிலோ என்ற அடிப்படையில் அதிகாலை 4 மணிக்கும் 7 மணிக்குமிடையில் ஈரத் தன்மையுள்ள வேளையில் விசிற வேண்டும்.

தண்டு - வேர் துளைப்பான் பெரும்பாலும் மரங்களின் வேர் தண்டு பாகங்களையே முழுமையாக தாக்குகின்றன. மரத்தின் தண்டுப் பாகத்தினுள் புழுவானது உட்புகுந்தால் மரத்திலிருந்து பிசின் போன்ற பதார்த்தம் வெளிவருவதுடன் மரத்தூள் வெளியில் காணப்படும். இதனைக் கட்டுப்படுத்த கூரியகத்தியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை வெட்டி புழுக்களையும் முட்டைகளையும் அகற்றிவிடல் வேண்டும். காயப்பட்ட பகுதிகளுக்கு 'செவின்' தூளுடன் புற்று மண் கலந்து கலவையை பூச வேண்டும். மரத்தின் அடிப்பாகத்தில் நிலத்திலிருந்து 2½ அடி உயரத்திற்கு முந்திரிகைக் கோதில் பெறப்பட்ட எண்ணை (CNSL) அல்லது கழிவு எண்ணையை பூசுவதாலும் இத் தாக்கத்தை ஓரளவு குறைக்கலாம்.

### கத்தரித்தல்

மரத்தின் பெரும்பாலான இலைப் பரப்பில் ஒளிபடக்கூடிய விதத்திலும் இலகுவில் அறுவடை செய்யக்கூடிய விதத்திலும் மரத்தின் வடிவம் மாற்றப்பட வேண்டும். முதல் இரு வருடம் வரை பிரதான தண்டு தவிர்ந்த ஏனைய சகல பக்கக்கிளைகளும் நிலத்தில் இருந்து 1 மீற்றர் உயரம்வரை கத்தரித்து அகற்றப்படும். 4-5 வருடங்களின் பின் பிரதான தண்டின் நுனிப்பாகம் 4 5 மீற்றர் உயரத்தில் வெட்டி அகற்றப்படுவதுடன் 2 - 3 வருடங்களுக்கொரு தடவை நீர்அரும்புகள், (Water shoots) நலிந்த கிளைகள், இறந்த தண்டுகள் என்பன வெட்டியகற்றப்படல் வேண்டும்;

### அறுவடை

இதன் ஆயுட்காலம் 25-30 வருடங்கள் 3வருடங்களில் அறுவடையை ஆரம்பிக்கலாம் வருடத்தில் ஒரு பருவத்தில் மட்டும் (ஏப்பிரல்) அறுவடை செய்யலாம். சாதாரணமாக 500-600 விதைகளை ஒரு பருவகாலத்தில் பெறமுடியும் காய்கள் மஞ்சள் அல்லது சிவப்பு நிறமாக மாறும் போது அறுவடை செய்யப்படும்.

யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபை அச்சகத்தில் அச்சிட்டு இல 14 மணிக்கூட்டு வீதியில் உள்ள யாழ். மா. கூ. சபையினரால் 1999-ம் ஆண்டு பங்குனி மாதம் வெளியிடப்பட்டது.